நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

"குறுவை சாகுபடி செய்ய முடியாத விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 10 ஆயிரம் நிவாரணம் '
First Published : 08 Aug 2012 01:54:04 AM IST



சென்னை, ஆக. 7: குறுவை சாகுபடி செய்ய முடியாத விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து செவ்வாய்க்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை:

தமிழகத்தின் காவிரி பாசனப் பகுதிகளில் இந்த ஆண்டு குறுவை சாகுபடி முற்றிலும் இல்லாமல் போய்விட்டது. குறுவை சாகுபடிக்காக காவிரி டெல்டா மாவட்டங்களுக்கு 12 மணிநேர மின்சாரம் வழங்கப்படும் என்ற முதல்வரின் அறிவிப்புக்கு மாறாக 7 அல்லது 8 மணி நேரம் மட்டுமே மின்சாரம் வழங்கப்பட்டது. அதுவும் தொடர்ச்சியாக வழங்கப்படவில்லை.

வழக்கமாக நடைபெறும் குறுவை சாகுபடியில் மூன்றில் ஒரு பங்கு கூட நடைபெறவில்லை. இதனால், லட்சக்கணக்கான விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் வாழ்வாதாரத்தை இழந்து நிர்கதியாக்கப்பட்டுள்ளனர்.

எனவே, குறுவை சாகுபடி செய்ய முடியாமல் வாழ்வாதாரத்தை இழந்து நிற்கும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.10 ஆயிரமும், விவசாயத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.10 ஆயிரமும் நிவாரணம் வழங்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

பட்டு விவசாயிகளுக்கு நலத் திட்ட உதவிகள் அளிப்பு
First Published : 07 Aug 2012 12:46:35 PM IST

தருமபுரி, ஆக. 6: தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த 40 பட்டு விவசாயிகளுக்கு ரூ.12 லட்சம் மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் ஆர்.லில்லி திங்கள்கிழமை வழங்கினார்.

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பட்டு வளர்ச்சித் துறையின் சார்பில், பட்டு வளர்ப்பு தாங்கிகள் அமைத்துள்ள 40 பயனாளிகளுக்கு தலா ரூ.30 ஆயிரம் மதிப்பிலான எலக்ட்ரிக்கல் கம்ப்ரசர், பவர் ஸ்பிரேயர், தண்டு அறுவடை இயந்திரம், பாலிமர் சந்திரிகைகள், கார்ட்போர்டு சந்திரிகைகள், டிஜிட்டல் ஹைக்ரோ மீட்டர் என மொத்தம் ரூ.12 லட்சம் மதிப்பிலான பட்டுப் புழு வளர்ப்புத் தளவாடங்களை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

மேலும், தருமபுரி வட்டத்தைச் சேர்ந்த 10 பயனாளிகளுக்கு விதவை, முதியோர், மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித் தொகை ஆணைகளை அவர் வழங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் ப.இராமர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) என்.செல்வராஜன், மாவட்ட வழங்கல் அலுவலர் சி.இராஜசேகரன், பட்டு வளர்ச்சித் துறை உதவி இயக்குநர்கள் ப.ஜெயக்குமார், கா.தனபால் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## உர விலை உயர்வைக் கண்டித்து விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

First Published : 07 Aug 2012 12:46:17 PM IST

தருமபுரி, ஆக. 6: உர விலை உயர்வுக்குக் காரணமான மத்திய அரசைக் கண்டித்து, தருமபுரியில் திங்கள்கிழமை தமிழக விவசாயிகள் சங்கத்தினர் ஊர்வலம் மற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தருமபுரி தலைமை அஞ்சல் அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு அந்தச் சங்கத்தின் மாநிலத் தலைவர் எஸ்.ஏ.சின்னசாமி தலைமை வகித்தார். மாநில துணைத் தலைவர் கே.எஸ்.ஆறுமுகம், மாவட்டத் தலைவர் பி.ஆர்.செங்கோடன், செயலர்கள் கே.சக்திவேல், கே.குப்புசாமி, பொருளாளர் உ.பழனி, கரும்பு விவசாயிகள் சங்கச் செயலர் ஜி.லோகநாதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

உற்பத்திச் செலவு அடிப்படையில், விவசாய விளை பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும். உர விலை உயர்வைத் திரும்பப் பெற வேண்டும். ரத்து செய்யப்பட்ட உர மானியத்தை திரும்ப வழங்க வேண்டும். தேசிய வங்கிகளில் விவசாயக் கடன் ரத்துத் திட்டத்தில் உள்ள குளறுபடிகளை நீக்க வேண்டும். கூடங்குளத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் முழுவதையும் தமிழகத்துக்கே வழங்க வேண்டும். காட்டுப் பன்றியை வன விலங்குகள் பட்டியலிருந்து நீக்க வேண்டும். தண்ணீர் உரிமை பறிக்கப்பட்டுள்ள தமிழகத்துக்கு எதிராகவும், அண்டை மாநிலங்களுக்கு ஆதரவாகவும் செயல்படும் மத்திய அரசைக் கண்டித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

முன்னதாக விவசாயிகள், தருமபுரி ராஜகோபால் கவுண்டர் பூங்காவிலிருந்து ஊர்வலமாகச் சென்றனர்.

தேயிலை விவசாயிகளுக்கு மானியம் வழங்கக் கோரிக்கை

First Published : 07 Aug 2012 09:54:11 AM IST

குன்னூர், ஆக. 6: வறட்சி நிலவுவதால் பசுந்தேயிலைக்கு அரசு மானியம் வழங்க வேண்டும், என தென்னிந்திய சிறு தேயிலை விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து அச் சங்கப் பொதுச்செயலர் ஜி.ராஜு வெளியிட்ட அறிக்கை:

÷நீலகிரி மாவட்டத்தில் 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் தேயிலை விவசாயத்தை நம்பியுள்ளனர். பருவமழை பெய்யாததால், 50 சதவீதம் தேயிலை மகசூல் பாதிக்கப்பட்டுள்ளது. பூச்சிகளின் தாக்குதலால் தேயிலை செடிகளே அழியும் நிலையில் உள்ளன. மேலும், பருவமழையை நம்பி விளைநிலத்தில் போடப்பட்ட இடுபொருள்களும் வீணாகிவிட்டன.

÷தேயிலை உற்பத்தி குறைந்து இருப்பதால், விவசாயிகளின் வாழ்க்கையே கேள்விக்குறியாகிவிட்டது. நீலகிரியில் உள்ள கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில் உறுப்பினர்களாக இருக்கும் விவசாயிகளுக்கு தேயிலை கிலோவிற்கு ரூ.2 யை மானியமாக அரசு கொடுக்கிறது. இதே போல், உறுப்பினர்கள் அல்லாத விவசாயிகளுக்கு தேயிலை கிலோவிற்கு ரூ.3 மானியமாக வழங்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுசீ ஈமு ஃபார்ம்: 75 ஆயிரம் கோழிகள் தீவனமின்றி தவிப்பு

ஜபுலிங் ஜான்

First Published : 07 Aug 2012 02:53:54 PM IST

ஈரோடு, ஆக.7: ஈரோடு பகுதியில் சுசீ ஈமு ஃபார்ம் - ஈமு கோழி வளர்ப்பு நிறுவனத்தில் கடந்த 3 நாள்களாக கோழித் தீவனம் இன்றி திண்டாடுவதால், ஈமு கோழிகள் தீவனம் இன்றி வாடிப் போயுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

சுசீ ஈமு ஃபார்ம் கோழிப் பண்ணையில் முதலீடு செய்தவர்கள் தாங்கள் ஏமாற்றப்பட்டதாக புகார் அளித்து, பண்ணையை முற்றுகையிட்டு வருகின்றனர். இதனால் பண்ணையின் செயல்பாடு தடைப்பட்டுள்ளது. கோழிப் பண்ணை நிர்வாக இயக்குனர் மீது முதலீட்டாளர்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்தனர் போலீஸார். இந்நிலையில் இன்று அவரது பாஸ்போர்ட் முடக்கப்பட்டது.

அதிகாரிகள் அந்தக் கோழி நிறுவனத்தின் உள்ளே சென்று ஆய்வு மேற்கொண்டனர். அப்போது, அங்கிருந்த 75 ஆயிரம் ஈமு கோழிகளுக்குத் தேவையான தீவனம் நிறுவனத்தில் இல்லாமல்

இருப்பது தெரியவந்தது. கடந்த 3 நாள்களாக கோழிகள் தீவனமின்றி இருந்ததும் தெரியவந்தது. அதிகாரிகளும் அவற்றின் தீவனத்துக்கு வழி தெரியாமல் திண்டாடுகின்றனர். கோழிகளையும் அழிக்க முடியாது என்பதால் சரியான தீர்வு குறித்து அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## நாத்து வெங்காயம் - நன்னெறி சாகுபடி முறைகள்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2012,00:00 IST



தமிழகத்தில் விதைமூலம் இனப்பெருக்கம் செய்யப்படும் சின்ன வெங்காய இனத்தைச் சேர்ந்த நாத்து வெங்காயம் தாராபுரம், பல்லடம், உடுமலை, ஒட்டன்சத்திரம், ஸ்ரீவில்லிபுத்தூர், நாமக்கல், சேலம், விழுப்புரம், கடலூர், பாவூர்சத்திரம் ஆகிய பகுதிகளில் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகின்றது. இதில் ஜண்டா எனப்படும் ஆந்திர மாநிலத்திலுள்ள ஸ்ரீகாகுளம் பகுதியில் சாகுபடி செய்யப்படும் உள்ளூர் ரகம், கடலூர் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் மட்ளூர் ரகம்

மற்றும் கோ-ஆன் 5 என பல ரகங்கள் உள்ளன.

**கோ-ஆன் 5:** இந்த ரகம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தால் நாணமேடு என்ற உள்ளூர் வகையில் இருந்து கூட்டுவழித் தேர்வு முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளியிடப்பட்டது. ஒரு கொத்தில் 3 முதல் 5 காய்கள் வரை இருக்கும். காய்கள் பெரியதாக, சிவப்பு நிறத்தில் உருண்டையாக காணப்படும். மகசூல், மண்வகை, பருவம், கடைபிடிக்கப்பட்ட தொழில் நுட்பங்களைப் பொறுத்து ஏக்கருக்கு 8 முதல் 9 டன்கள் வரை கிடைக்கும்.

விதைப்பு பருவம்: டிசம்பர் முதல் ஏப்ரல் மாதம் வரை விதைகள் விதைக்கப்படுகின்றது. நாற்றுக்களின் வயது 50 நாட்கள். நடவானது ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரை நடவு செய்யப்படுகின்றது.

**நாற்றங்கால் தொழில்நுட்பங்கள்:** நன்கு வடிகால் வசதியுடைய வளமான மண்ணைத் தேர்ந்தெடுக்கவும். நிலத்தை உழுது பயிர்க்கழிவுகளை அகற்றி சமன் செய்ய வேண்டும். 3 மீ நீளம், 0.6 மீ அகலம், 0.2 மீ உயரமுடைய மேட்டுப்பாத்திகளை அமைத்து நன்கு மக்கிய தூளாக்கப்பட்ட தொழு உரத்தை இடவேண்டும். 100 ச.மீ. நாற்றங்காலுக்கு 12.5 கிராம் டிரைகோடெர்மா விரிடியை 1.25 கிலோ மக்கிய தொழு உரத்துடன் கலந்து பாத்திகளில் இடவேண்டும் அல்லது பாத்திகளை திரம் அல்லது கேப்டான் 5 கிராம்/ஒரு ச.மீ. என்ற அளவில் விதைப்பிற்கு முன் பாத்திகளில் இட்டு மண் நேர்த்தி செய்யலாம்.

100 ச.மீ. நாற்றங்காலுக்கு 550 கிராம் யூரியா, 3 கிலோ சூப்பர் பாஸ்பேட், 400 கிராம் மூரியேட் ஆப் பொட்டாஷ் என்ற அளவில் உரமிட வேண்டும். விதைகளை வரிசையாக 5 செ.மீ. இடைவெளியில் 2 செ.மீ. ஆழத்தில் விதைக்க வேண்டும். நன்கு மக்கிய தூளாக்கப்பட்ட தொழு உரத்தைக் கொண்டு வரிசையாக விதைக்கப்பட்ட விதைகளை மூடவேண்டும்.

**நடவு வயல் தயாரிப்பு**: நடவு வயலை கட்டிகள் இல்லாமல் 2-3 தடவை நன்றாக உழவு செய்து கடைசி உழவில் ஏக்கருக்கு 10-15 டன்கள் தொழு உரம் இடவும். பின் பார்வை 45 செ.மீ. (ஒன்றரை அடி) இடைவெளியில் கட்ட வேண்டும். பார்களுக்கு பதில் சமபாத்திகளில் நடவு செய்பவர்கள் பாத்திகளின் அகலம் 1.5 மீட்டருக்கு மிகாலும் 3 முதல் 3மீ நீளம் வரையிலும் அமைக்கலாம்.

**உர மேலாண்மை:** 2 கிலோ டிரைகோடெர்மா விரிடியை 200 கிலோ மக்கிய குப்பையுடன் கலந்து 30 நாட்கள் வைத்திருந்து அந்த கலவையினை பார் கட்டும் முன் நிலத்தில் இடுவதால் அறுவடை சமயத்தில் வரும் தூரழுகல் நோய் கட்டுப்படுத்தப்படும்.

**மேலும் தொடர்புக்கு**: கே.பரமேஸ்வரன், ஒட்டன்சத்திரம் (மொபைல்: 98439 07878, 94420 37003)

-கே.சத்யபிரபா, உடுமலை.

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2012,00:00 IST

**தினை சாகுபடி:** தமிழகத்தில் பெரும்பாலும் மானாவாரியாகவே சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக சேலம், ஈரோடு, கோவை, திண்டுக்கல், மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் அதிகளவில் பயிரிடப் படுகிறது. தினையில் உள்ள சத்துக்கள் நம் அன்றாட உணவில் பயன்படுத்தி வரும் நெல், அரிசி, கோதுமையில் உள்ளதைவிட அதிகமானது.
**உயர்விளைச்சல் ரகங்கள்**: கோ-6: வயது 85-90 நாட்கள், விளைச்சல் எக்டருக்கு 1500-1700 கிலோ, இறைவை, மானாவாரியாக பயிரிட ஏற்றது. கோ(தி)7: வயது 85-90 நாட்கள், விளைச்சல் எக்டருக்கு 1900-2000 கிலோ. இறைவை மானாவாரியில் பயிரிட ஏற்றது. அதிக விளைச்சலைத் தரக்கூடியது. ஆடி, புரட்டாசிப் பட்டத்தில் மானாவாரியாக எல்லா வகை மண்ணிலும் தினைப்பயிர் நன்கு வளரும். செம்மண், இருமண் கலந்த நிலங்கள் இதற்கு உகந்தது. உயர் விளைச்சலைத் தரக்கூடிய ரகத்தினை பயன்படுத்தும்போது அதிக விளைச்சல் பெறலாம்.
ஒரு எக்டருக்கு வரிசை விதைப்பிற்கு 10 கிலோவும் தூவுவதற்கு 12.5 கிலோவும் விதை தேவைப்படும். கதிர்கள் நன்கு காய்ந்து இலைகள் பழுத்தவுடன் அறுவடை செய்து களத்தில் காயவைத்து அடித்து தானியங்களைப் பிரித்து சுத்தம் செய்ய வேண்டும். உயர் விளைச்சல் ரகங்களைப் பயன்படுத்துவதாலும் சீரிய சாகுபடி குறிப்புகளை கடை பிடிப்பதாலும் தோராயமாக எக்டருக்கு 1855 கிலோ தானிய மகசூலும் 5138 கிலோ தட்டை விளைச்சலும் பெறலாம். இவ்வாறு கிடைத்த தானியத்தை சாக்குப் பைகளில் வைத்து நீண்டகாலம் சேமிக்கலாம். மானாவாரியில் தினைப் பயிரை தீவனமாக சாகுபடி செய்தால் ஒரு பணப்பயிரைப்போல லாபம் ஈட்டலாம். மலைவாழ் மக்களால் பெரிதும் விரும்பி பயிரிடப்படும் தினை கடினமான வறட்சியையும் தாங்கி வளரக்கூடியது.
**மதிப்பூட்டப்பட்ட பொருட்கள்**: தினையிலிருந்து அரிசி, அவல், உப்புமா, தோசை, புட்டு, முறுக்கு, பக்கோடா போன்ற பல்வேறு வகையான சுவையான உணவுப் பொருட்களைத் தயாரிக்கலாம். கொத்துக்கொத்தாய் தினைப்பயிர் விளைந்து நிற்கும்போது கிளியும் குருவியும் கொத்திக்கொண்டு போகாமல் காக்க வேண்டியது அவசியம். (தகவல்: முனைவர் அ.நிர்மலகுமாரி, முனைவர் சு.ரேவதி, முனைவர் பெ.வீரபத்திரன், சிறுதானியத்துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-641 003. போன்: 0422-245 0507)-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

## கரும்பு விவசாயத்தில் வறட்சியை சமாளிக்க...

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2012,00:00 IST



கரும்பு வெட்டியவுடன் சருகை அப்படியே விட்டுவிடுவதால் தரையில் ஈரம் காக்கப்படுகிறது. இதனால் கட்டைப்பயிர் செய்வதில் பயிர் கிடைப்பதில் எந்த சிரமமும் ஏற்படுவதில்லை. களிமண், கரிசல் (அ) வண்டல் மண்ணாக இருந்தால் மாதம் ஒரு தண்ணீரும், மணற்பாங்கான மண்ணாக இருந்தால் 20 நாட்களுக்கு ஒரு தண்ணீரும் விட்டால் போதும். சருகுக்கு கீழே பார்த்தால் எப்போதும் மண் பொலபொலப்பாகவே இருக்கும். இதில் களை கட்டுப்பாடு சிறப்பாக இருக்கும். களை கட்டுப்படுவதால் நிலத்தில் சத்து விரயமாவதில்லை. களைவெட்டு, கொத்து கொத்துதல், இடை உழவு செய்வது, மண் அணைப்பது போன்ற வேலைகள் இல்லை. இதனால் ஏக்கருக்கு ரூ.10,000 மிச்சமாகும்.

ஆள் பற்றாக்குறை தவிர்க்கப்படுகிறது. கரன்ட் தட்டுப்பாடு பாதிப்பில்லை. குருத்துப்பூச்சி பாதிப்பில்லை. இடைக்கணுப்புழு பாதிப்பில்லை. பெரும் வெடிப்புகள் ஏற்படுவதில்லை. இதனால் வேர் அறுபடாததால் கரும்பின் வளர்ச்சி பாதிக்கப்படுவதில்லை. தண்ணீர் சற்று உவர் நீராக இருந்தாலும் அதிக தண்ணீர் பாயாததால் மண் உப்பாவதில்லை. நிலத்தடி நீர் பாதுகாக்கப்படுகிறது. மழை பெய்தது போக வருடத்திற்கு 8 முறை தண்ணீர் கட்டினால் போதும். சருகு மக்குவதால் இயற்கை எருவும் கிடைக்கிறது. மொத்தத்தில் இதனால் விவசாயிகளுக்கு நிம்மதி கிடைக்கிறது.

**பாதுகாப்பு தேவை**: தீ படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். சருகு எரியும்போது பயிரும் எரிந்துவிடும். உரம் போடும்போது சருகை நீக்கிவிட்டு தரையில்தான் போடவேண்டும். அப்போதுதான் தண்ணீரில் கரைந்து பயிருக்கு கிடைக்கும். சருகின் மேலேயே போட்டால் பயிருக்கு எந்தப்பலனும் கிடைக்காது. எலித்தொல்லை ஏற்படும். இதற்கு போரேட் மருந்தை

அந்தந்த இடத்தில் தூவிவிட்டால் தண்ணீர் கரைந்திருக்கும்போது எலி, பாம்பு போன்றவை அழிந்துவிடுகின்றன. -சி.முருகேசன், அங்கனூர், 94454 13652.

## தென்னை வளர்ச்சி வாரியத்தின் மகத்தான பணிகள்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2012,00:00 IST



தென்னை சார் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான திட்டங்களை செயல்படுத்துதல், தேங்காய் மற்றும் தேங்காய் சார் பொருட்களின் விற்பனையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை பரிந்துரை செய்தல். தென்னை சாகுபடியாளர்களுக்கும் தென்னைசார் தொழில் முனைவோர் களுக்கும் தொழில்நுட்ப அறிவுரை வழங்குதல். தென்னை சாகுபடி பரப்பை அதிகரிக்க நிதி உதவி மற்றும் இதர உதவிகளை செய்து தருதல், தேங்காய் மற்றும் தேங்காய் சார் பொருட்களைப் பதனம் செய்வதற்கு நவீன தொழில்நுட்பங்களை கடைபிடிப்பதற்கு ஊக்கம் அளித்தல். ஒருங்கிணைந்த தென்னை தொழில் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தென்னை வளர்ச்சி வாரியம் செயல்படுத்திவரும் திட்டங்கள்: தென்னை நாற்றுகள் உற்பத்தி மற்றும் விநியோகம், தென்னை சாகுபடி பரப்பளவை விரிவுபடுத்துதல். உற்பத்தி திறன் மேம்பாட்டுக்கான ஒருங்கிணைந்த பண்ணையம், தொழில்நுட்ப செயல்விளக்கம், சந்தை மேம்பாட்டு விளம்பரங்கள், தகவல் மற்றும் கணிப்பொறி தொழில்நுட்பம் தென்னை தொழில்நுட்ப சிறப்பு செயல்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப் படும் திட்டங்கள்: தென்னையைத் தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்களை கட்டுப்படுத்துவதற்கான தொழில் நுட்பங்களைக் கண்டுபிடிப்பது, செயல் விளக்கங்கள் செய்வது மற்றும் செயல்படுத்துவது, தேங்காய்சார் பொருட்களைப் பதனம் செய்வது மற்றும் பண்முகப் படுத்துவதற்கான தொழில் நுட்பங் களை கண்டு பிடிப்பது மற்றும் செயல் படுத்துவது, சந்தை ஆய்வு மற்றும் விளம்பரம் செய்வது.

**தென்னை சுற்றுலா**: தற்போது தென்னை சுற்றுலாவை ஊக்குவிக்கும் பொருட்டு தென்னை

வழித்தடம் என்ற சுற்றுலாத் திட்டத்தை தென்னை வளர்ச்சி வாரியம் துவங்கியுள்ளது. இந்த திட்டத்தின்கீழ் சுற்றுலாப் பயணிகள் கேரளாவில் கொச்சிக்கு அருகிலுள்ள கும்பளாங்கி என்ற சுற்றுலா கிராமத்திலிருந்து புறப்பட்டு, இந்தியாவின் தெற்கு, கிழக்கு, வடக்கு மற்றும் வடகிழக்குப் பிராந்தியங்களில் உள்ள சுற்றுலா தலங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள். அந்த இடங்களில் வசிக்கும் தென்னை விவசாயிகளின் வாழ்க்கை முறை பற்றியும் தேங்காய் மற்றும் தென்னை மரத்தின் இதர பாகங்களின் பயன்பாடுகள் பற்றியும் கண்கூடாகக் கண்டு நேரடியாக அறிந்துகொள்வார்கள்.

நமது தென்னை விவசாயத்தின் மகிமையை உலகறியச் செய்வது மற்றும் இந்த கிராமங்களைத் தன்னிறைவு பெறச்செய்வதுதான் இந்த திட்டத்தின் நோக்கமாகும். தேங்காய் உற்பத்தியை அதிகரிப்பது, மதிப்புக் கூட்டப்பட்ட தென்னை சார் பொருட்களின் உற்பத்தியை ஊக்குவிப்பது, அந்த பொருட்களை நல்ல முறையில் சந்தைப்படுத்துவதற்கு தேவைப்படும் அனைத்து வசதிகளையும் செய்து தருவது போன்றவைகளும் இந்த திட்டத்தில் அடங்கும். இந்த சுற்றுலாவின் போது சுற்றுலா பயணிகள், தென்னை மரங்களின் எழில் கொஞ்சும் இயற்கை காட்சிகளைக் கண்டுகளிக்க முடியும். உடலுக்கு தெம்பூட்டும் இளநீரைக் குடித்து இன்புற முடியும். சுவையான உணவு வகைகளை உண்டு மகிழ முடியும். அழகிய கைவினைப் பொருட்களை வாங்கி மகிழ முடியும். இவைகளைத் தவிர, தென்னை மரங்கள் நிமிர்ந்து நிற்கும் கரைகளைக் கொண்டுள்ள உப்பங்கழிகளில் உல்லாசப்படகு சவாரி செய்ய முடியும்.

அருங்காட்சியகம்: பலவகை தென்னை சார் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள அருட்காட்சியகம் ஒன்றை அமைப்பதற்கு திட்டமிடப் பட்டுள்ளது. மனிதசக்தி மற்றும் கருவிகள் உதவியால் தென்னை மரத்தில் ஏறும் முறைகள், தேங்காய் பறிக்கும் முறைகள், தேங்காய் உரிக்கும் முறைகள் யாவும் இந்த அருங்காட்சியகத்தில் வைக்கப்படும். தென்னை மரக்கட்டைகள் மற்றும் தென்னை ஓலைகளைப் பயன்படுத்தி தென்னை மர வீடு ஒன்றை கட்டுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

தென்னைப்பூங்கா மதிப்புக் கூட்டப் பட்டுள்ள தென்னைசார் பொருட்களை தயாரிப்பது மற்றும் அவற்றை சந்தைப் படுத்துவது பற்றி விளக்கம் அளிக்கும் வகையில் ஒரு தென்னை பூங்காவும் அமைக்கப்பட உள்ளது. தேங்காய் சிரட்டை மற்றும் தென்னை மரக்கட்டையில் செய்யப்பட்ட அழகிய கைவினைப் பொருட்களை காட்சிக்கு வைத்து விற்பனை செய்யும் வகையில் கைவினைக்கிராமம் ஒன்றும் அமைக்கப்பட உள்ளது. அங்கு கைவினைப் பொருட்களுக்கான பயிற்சி மையமும் அமைக்கப்படும். இந்த திட்டம் செயல்படும் பகுதிகளிலுள்ள தென்னை கிராமங்கள் நாளடைவில் மையக் கிராமங்களாக மாற்றப்படும். அவைகளில் தென்னை சம்பந்தமான அதன் அனைத்து செயல்பாடுகளும் செயல் விளக்கங்கள் மூலம் சுற்றுலாப் பயணிகளுக்கு செய்துகாட்டப்படும். அங்கு தென்னை சார் பொருட்கள் யாவும் வாங்குவதற்கு கிடைக்கும். பெரும்பாலும் தென்னை விவசாயிகள் சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவைச்

சேர்ந்தவர்களாவார்கள். அவர்கள் அனைவரும் இந்தத் திட்டம் மூலம் அதிக நன்மை அடைவார்கள்.

தென்னை வளர்ச்சி வாரியத்தின் தென்னை விவசாயிகளுக்குப் பயிற்சி அளிப்பது, மானியம் வழங்குவது, சுற்றுலா அழைத்துச் செல்வது, விற்பனைக்கு உதவுதல், புத்தகங்கள் வெளியிடுதல், பத்திரிகைகள் (பல மொழிகளில்) வெளியிடுதல் போன்ற சேவைகளை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். "தென்னை இதழ்' என்னும் காலாண்டுஇதழ் தமிழில் வெளியிடுகின்றனர். வருடசந்தா ரூ.40 மட்டுமே. குறைந்த விலையில் தென்னை விவசாயம், உபபொருட்கள், தேங்காய் உணவுகள், டைரக்டரி என பல தலைப்புகளில் புத்தகங்கள் வெளியிடுகின்றனர். இவ்வாரியத்தை தென்னை விவசாயிகள் பயன்படுத்தி முன்னேறிட வேண்டும். மேலும் விபரங்களுக்கு: தலைவர், Chairman, Coconut Development Board, Ministry of Agriculture, Govt. of India, Kerala Bhavan, Kochi682 011. ph: 0484237 7266. Fax: 0484237 7902, www.coconutboard.gov.in. email: cdb/cochi@gmail.com. தமிழக கிளை: துணை இயக்குனர், C/o.இயக்குனர் அக்ரிகல்சுரல் மார்க்கெட்டிங், இரண்டாம் மாடி, தொழிற்பேட்டை, Cipet ரோடு, கிண்டி, சென்னை-32.

-எம்.ஞானசேகர்,தொழில் மற்றும் விவசாய ஆலோசகர், 97503 33829.

## பருவமழை தாமதத்தால் கரீப் பருவ சாகுபடி பரப்பளவு குறைந்தது



புதுடில்லி: தென்மேற்கு பருவமழை குறைந்ததால், நாட்டின் பல மாநிலங்களில், வேளாண் சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளது. பொதுவாக, தென்மேற்கு பருவ மழை ஜூன் மாதம் துவங்கி, செப்டம்பர் வரை நீடிக்கும். ஆனால், இவ்வாண்டு, ஜூன், ஜூலை ஆகிய இரு மாதங்களில், மழை பொழிவு மிகவும் குறைந்துள்ளது. இதையடுத்து, ஆகஸ்ட் 3ம் தேதி வரையிலுமாக, வேளாண் சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளதாக மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்நிலையில், நேற்று, வானிலை ஆராய்ச்சி மையம், ஆகஸ்ட் மாதத்தில், மழை பொழிவு 96

சதவீதத்தை எட்டிவிடும் என, அறிவிப்பு வெளியிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.பருப்பு வகைகள்ஆகஸ்ட் 3ம் தேதி வரையிலுமாக, துவரை, உளுந்து, கடலைப் பருப்பு போன்ற பருப்பு வகைகள் சாகுபடி பரப்பளவு 72.80 லட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது. இது, கடந்த ஆண்டு, இதே பருவத்தில், 87.50 லட்சம் ஹெக்டேராக இருந்தது. மகாராஷ்டிரா,கர்நாடகா, ஆந்திரா, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் மழை பொழிவு குறைந்துள்ளதையடுத்து, இவற்றின் உற்பத்தி குறையும் எனமதிப்பிடப்பட்டுள்ளது.நெல் உற்பத்திஇதே போன்று, கரீப் பருவத்தில், மழை குறைவின் காரணமாக, ஆகஸ்ட் 3ம் தேதி வரையிலுமாக, 2.37 கோடி ஹெக்டேரில் தான் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேசமயம், கடந்த பருவத்தில், 2.59 கோடி ஹெக்டேரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டிருந்தது. குறிப்பாக, மேற்கு வங்கம், ஒடிசா, உத்தர பிரதேசம் மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்களில், நெல் சாகுபடி பரப்பளவு மிகவும் குறைந்துள்ளது.இருப்பினும், சென்ற ஆண்டில், நாட்டின் நெல் உற்பத்தி, மிகவும் அதிகரித்து, அதிகளவில் கையிருப்பு உள்ளதால் அரிசிபற்றாக்குறை ஏற்படாது என, வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.கரும்பு சாகுபடிகரும்பு அதிகளவில் உற்பத்தியாகும், மகாராஷ்டிரா, உத்தரபிரதேசம், கர்நாடகா ஆகிய மாநிலங்களில், குறைந்த மழை பொழிவால், வரும் பருவத்தில், இதன் சாகுபடி பரப்பளவும் குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது, உள்நாட்டில், 52.90 லட்சம் ஹெக்டேரில், கரும்பு சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது, கடந்த பருவத்தில், 50.60 லட்சம் ஹெக்டேராக இருந்தது. கரும்பு அரவை பருவம் என்பது, அக்டோபர் மாதம் முதல்துவங்குகிறது.எண்ணெய் வித்துக்கள்பொதுவாக, கரீப் பருவத்தில், சோயாமற்றும் நிலக்கடலையே மிக அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. மழை குறைந்துள்ளதால், இவ்வாண்டு, ஒட்டு மொத்த எண்ணெய் வித்துக்கள் சாகுபடி பரப்பளவு குறையுமென மதிப்பிடப்பட்டுள்ளது.மத்திய மற்றும் மேற்கு பகுதிகளில், மழை குறைவால், எண்ணெய் வித்துக்கள் சாகுபடி பரப்பளவு 1.45 கோடி ஹெக்டேராக குறைந்துள்ளது.இது, கடந்த ஆண்டு இதே பருவத்தில், 1.50 கோடி ஹெக்டேராக இருந்தது.எண்ணெய் வித்துக்கள் சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளதையடுத்து, இவற்றின்உற்பத்தியும் குறையும். இதனால், நவம்பர் மாதம் முதல், நம் நாடு, சமையல் எண்ணெய் வகைகளை அதிகளவில் இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும்.பருத்திநாட்டில் குஜராத் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய இரு மாநிலங்களில்தான், பருத்தி அதிகளவில் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. மழை குறைந்துள்ளதால், இதன் சாகுபடி பரப்பளவு, 100.10 லட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது. இது, கடந்த பருவத்தில், 109.90 லட்சம் ஹெக்டேராக இருந்தது.மழை குறைவால் மட்டுமின்றி,பருத்திக்கு போதிய விலை கிடைக்காததால், மகாராஷ்டிராவில் பல விவசாயிகள் சோயா வித்து சாகுபடிக்கு மாறியுள்ளனர்.காபி உற்பத்திகாபி உற்பத்தியில் கர்நாடக மாநிலமே முன்னிலையில் உள்ளது. இங்கு, அக்டோபர் மாதம் துவங்கும் பருவத்தில், 3,25,300 டன் காபி உற்பத்தியாகும் என, காபி வாரியம் மதிப்பீடு செய்துள்ளது. இது, நடப்பு ஆண்டு உற்பத்தியை (3,14,000 டன்) விட,

அதிகமாகும். ஆனால், மழை குறைவால், காபி வாரியத்தின் மதிப்பீட்டு இலக்கை எட்டுவது கடினம் என, வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.ரப்பர்ரப்பர் உற்பத்தியில் முதலிடத்தில் உள்ள கேரளாவில், மழை பொழிவு, 44 சதவீதம் குறைந்துள்ளது. என்றாலும், இம்மாநிலத்தில், ஒரு சில தின இடைவெளியில் மழை பொழிவு உள்ளது. இது, ரப்பர் பால் வடிப்பிற்கு சாதக மாக உள்ளது என கூறப்படுகிறது.எனவே, மார்ச் மாதத்துடன் நிறைவடைய உள்ள பருவத்தில்,9,42,000 டன் ரப்பர் உற்பத்தியாகும் என்றும், இது, கடந்த ரப்பர் பருவ உற்பத்தியை (8,99,400 டன்)விட, அதிகமாகும் என, ரப்பர் வாரியம் தெரிவித்துள்ளது.தேயிலைஉள்நாட்டில், அசாம் மாநிலத்தில்தான், தேயிலை அதிகளவில் உற்பத்தியாகிறது. இங்கு, நடப்பாண்டின் முதல் ஐந்து மாதங்களில், வறட்சி நிலவியது. ஆனால், ஜூன், ஜூலை ஆகிய இரு மாதங்களில், மழை பொழிவு அதிகரித்து காணப்பட்டது.இதனால், அங்கு தேயிலை உற்பத்தி பாதிப்புக்குள்ளாகியுள்ளது. கர்நாடகா மற்றும் கேரளாவில், மழை பொழிவு குறைந்துள்ளது. இதனால், ஒட்டு மொத்த அளவில், நடப்பு 2012ம் ஆண்டில், தேயிலை உற்பத்தி குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது. அதேசமயம், கடந்த ஆண்டில் இதன் உற்பத்தி, 98.83 கோடி கிலோவாக இருந்தது.

### நாட்டின் புண்ணாக்கு ஏற்றுமதி 5 சதவீதம் சரிவு



புதுடில்லி: நடப்பு 2012-13ம் நிதியாண்டின் ஏப்ரல் முதல் ஜூலை வரையிலான, நான்கு மாத காலத்தில், நாட்டின் புண்ணாக்கு ஏற்றுமதி, 13.35 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. இது, கடந்த நிதியாண்டின் இதே காலத்தில், மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை விட (14.03 லட்சம் டன்), 5 சதவீதம் குறைவாகும் என, இந்திய சமையல் எண்ணெய் உற்பத்தியாளர் சங்கம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.கடந்த ஜூலை மாதத்தில் மட்டும், புண்ணாக்கு ஏற்றுமதி, 2,74,635 டன்னாக இருந்தது. இது, கடந்த ஆண்டின் இதே மாதத்தில், மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை (2,81,879 டன்) விட,3 சதவீதம் குறைவாகும்.நடப்பு நிதியாண்டின் முதல் நான்கு மாத காலத்தில், நம் நாட்டிலிருந்து ஈரான் மிகவும்

அதிகமாக,அதாவது, 4,51,915 டன் புண்ணாக்கை இறக்குமதி செய்து கொண்டுள்ளது. இது, கடந்த ஆண்டின் இதே காலத்தில், 86,212 டன்னாக இருந்ததுஎன்பது குறிப்பிடத்தக்கது.ஈரானை தொடர்ந்து, தென் கொரியா, வியட்நாம், ஜப்பான், தாய்லாந்து, இந்தோனேஷியா மற்றும் ஐரோப்பா ஆகிய நாடுகள், நம் நாட்டிலிருந்து அதிகளவில் புண்ணாக்கை இறக்குமதி செய்து கொள்கின்றன. ஏற்றுமதி செய்யப்படும் புண்ணாக்கு வகைகள், வெளிநாடுகளில் தீவனமாக பயன்படுத்தப்படுகின்றன.கடந்த 2011-12ம் நிதியாண்டில், நாட்டின்புண்ணாக்கு ஏற்றுமதி அதற்கு முந்தைய நிதியாண்டை விட, 9 சதவீதம் அதிகரித்து, 50.71 லட்சம் டன்னிலிருந்து, 55.20 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.

## வேளாண் தொழில் நுட்ப பயிற்சி முகாம்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2012,06:07 IST

கருத்தை பதிவு செய்ய

தர்மபுரி: தர்மபுரியில், உழவர் பயிற்சி நிலையம் சார்பில், உழவர் விவாதக்குழு அமைப்பாளர்களுக்கு வேளாண் தொழில் நுட்பம் குறித்த பயிற்சி முகாம் நடந்தது.
உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் மேகநாதன் தலைமை வகித்தார்.
தோட்டக்கலை துறை துணை இயக்குனர் கலைசெல்வி, தோட்டக்கலை துறையில் உள்ள அரசு மானிய திட்டங்கள் குறித்தும், வறட்சி மேலாண்மைக்காக சொட்டு நீர் உர பாசனம், நிலப்போர்வை அமைத்தல், பசுமை குடில் அமைத்தல், மா அடர் நடவு முறை, கோலியஸ், மலர்கள் மற்றும் நறுமண பயிர் சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து அமைப்பாளர்களுக்கு பயிற்சி அளித்தார்.குண்டல்பட்டி கால்நடை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் மீனலோசனி, கறவை மாடு வளர்ப்பில் பெரும்பான்மையான பணம் பூசா மற்றும் அடர் தீவனத்துக்காக விவசாயிகள் செலவழிப்பதால் அவர்களுக்கு கிடைக்கும் லாபம் குறைகிறது எனவும், புதிய ரக பசுந்தீவனங்கள், மக்கா சோள மாவு மற்றும் தாது உப்பு கலவை ஆகியவற்றை சரியான விகிதத்தில் அளிப்பதன் மூலம் பாலில் கொழுப்பு சத்து அதிகரித்து அதிக லாபம் பெறலாம், எனக் கூறினார்.
இந்தியன் வங்கி சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவன இயக்குனர் வடிவேல் பேசுகையில், பயிர் சாகுபடியில் வங்கிகளின் செயல்பாடு, பயிர் கடன் பெறும் வழிமுறைகள் குறித்து விளக்கினார்.
மீன் வள ஆய்வாளர் சுப்பிரமணியன், மீன் வளர்ப்பு தொழில் நுட்பங்கள் குறித்தும், உதவி பொறியாளர் அரசகுமாரன் வேளாண் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் விளக்கினார
வேளாண் விற்பனை குழு செயலாளர் முருகேசன், விற்பனை குழு செயல்பாடுகள், சந்தை

வாய்ப்புகள் குறித்தும் பேசினார். வேளாண் அலுவலர் சத்தியபிரகாஷ், இளநிலை பட்டு ஆய்வாளர் சுந்தர், ஏட்டு வட்டாரங்களை சேர்ந்த உழவர் விவாத குழு அமைப்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## இலவச விதை வழங்கல்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2012,06:17 IST

கருத்தை பதிவு செய்ய

ஓசூர்: ஓசூர் அருகே ராகி விவசாயிகளுக்கு வேளாண்மை துறை சார்பில், 30 லட்சம் ரூபாய் மதிப்பில் இலவசமாக விதை, இடுபொருட்கள் வழங்கப்பட்டது.கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சிறுதானிய உற்பத்தியை பெருக்க ஒவ்வொரு வட்டாரத்திலும் வேளாண் துறை சார்பில் இரு கிராமங்களை தேர்வு செய்து இலவச விதை, இடுபொருட்கள் வழங்கப்படுகிறது.

ஓசூர் அருகே கெலமங்கலம் வட்டாரத்தில் ஜே.காருப்பள்ளி, அனுமந்தபுரம் கிராமங்களை வேளாண்மை துறை தேர்வு செய்து, அந்த கிராமங்களை சேர்ந்த ஆயிரம் ஏக்கர் விவசாயிகளுக்கு ராகி மகசூலை பெருக்க ராகி விதை, உரம் மற்றும் இடுபொருட்களை இலவசமாக வழங்கும் விழா நடந்தது.கெலமங்கலம் வேளாண் உதவி இயக்குனர் எட்கர் கொண்சால்வஸ், 30 லட்சம் மதிப்புள்ள ராகி வதை, இடுபொருட்களை விவசாயிகளுக்கு வழங்கினார். உதவி வேளாண்மை அலுவலர்கள் கணேசன், ராஜ்குமார், பஞ்சாயத்து தலைவர் சத்தியவதி நாகராஜ், துணை தலைவர் ரவி, கவுன்சிலர் சின்னமான் மற்றும் சுற்றுவட்டார விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## பட்டு விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவி வழங்கல்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2012,06:17 IST

கருத்தை பதிவு செய்ய

ஓசூர்: ஓசூரில், பட்டு விவசாயிகளுக்கு, 3 லடசத்து 70 ஆயிரம் ரூபாய் நலத்திட்ட உதவிகளை காதி, கைத்தறி துறை முதன்மை செயலாளர் சந்தானம் வழங்கினார்.தமிழ்நாடு காதி, கைத்தறி துறை முதன்மை செயலாளர் சந்தானம் ஓசூர் பகுதியில் பட்டு வளர்ச்சி பணிகள் மற்றும் திட்ட செயலாளர்கள் குறித்து ஆய்வு நடத்தினார்.அப்போது, ஓசூர் தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையத்தை பார்வையிட்டார். பட்டு வளர்ச்சி பயிற்சி நிலைய முதல்வர் வேணுகோபால், அவற்றின் செயல்பாடுகள் குறித்து முதன்மை செயலாளரிடம் விளக்கினார்.

பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் விவசாயிகளுக்கு பயிற்சி விளக்க கையேடுகள் வழங்கவும்,

அவரவர் நிலத்தில் இருந்து எடுத்து வந்த மண் பரிசோதனை செய்து அந்த நிலைத்தின் நிறை, குறைகளை விவசாயிகளுக்கு எடுத்து கூற வேண்டும் என முதன்மை செயலாளர் சந்தானம் அறிவுரை வழங்கினார்.பட்டு விவசாயிகளுக்கு, 3 லட்சத்து 70 ஆயிரத்து 64 ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள், மானிய உதவிகளை முதன்மை செயலாளர் சந்தானம் வழங்கினார். உத்தனப்பள்ளி நாட்டின பட்டு பண்ணையை ஆய்வு செய்தார். வெண் பட்டு முட்டைகள் சேமித்து வைக்கப்படும் குளிர்பதன அறையை பார்வையிட்டார்.
ஆய்வின் போது பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனர் பிரபாகரன் மற்றும் பட்டு வளர்ச்சி அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## கரும்பு விளைச்சல் ஜோர் விவசாயிகள் மகிழ்ச்சி

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2012,04:37 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில், தைப் பொங்கலுக்கான சாகுபடி செய்யப்பட்ட கரும்பு விளைச்சல் ஜோராக உள்ளது.ஈரோடு மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் உள்ளனர். இதில், 2,000க்கும் மேற்பட்ட விவசாயிகள், கரும்பு, வாழையை பயிர் செய்து வருகின்றனர். ஈரோடு மாவட்டத்தில் கறுப்பு கரும்பு, ஆலைக்கரும்பு என இரு வகையாக, பயிர் செய்யப்படுகிறது.ஈரோடு மாவட்டத்தில் ஒரு சில விவசாயிகளே கறுப்பு கரும்பை வளர்த்து வருகின்றனர். கறுப்பு கரும்பை சித்திரையில் நடவு செய்து, தை மாதத்தில் அறுவடை செய்வது, விவசாயிகளின் வழக்கம். சித்திரை மாதத்தில், விதைக் கரும்புகளை விவசாயிகள் நடவு செய்தனர். குறைந்தளவு நீரிலும் கரும்பின் விளைச்சல் ஜோராக உள்ளதாக, காஞ்சிக்கோவில் விவசாயிகள் தெரிவித்தனர்.விவசாயிகள் கூறியதாவது:மாநிலம் முழுவதும் பருவமழை பொய்த்ததால், குறைந்தளவு தண்ணீரில், விளைச்சல் தரும் பயிர்களை விவசாயிகள் வளர்த்து வருகின்றனர். குறைந்தளவு நீரிலும் கரும்பு விளைச்சல் அமோகமாக இருக்குமென்பதால், மாவட்டம் முழுவதும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள், கரும்பு சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். விதைக்கரும்பு சித்திரையில் நடவு செய்யப்பட்டது. கரும்பு விளைச்சலுக்கு தேவையான வெப்பநிலை நிலவுவதால், கரும்பு விளைச்சல் ஜோராக உள்ளது.
கறுப்பு கரும்பு முழு வளர்ச்சியடைய எட்டு மாதங்களாகும். சித்திரையில் நடவு செய்தால், தை மாதத்தில் அறுவடைக்கு ஏற்ப, கரும்பு முழு வளர்ச்சியை பெற்றிருக்கும். தற்போது, கரும்பின் வளர்ச்சி நன்றாக இருப்பதால், 2013ம் ஆண்டு பொங்கலுக்குள், கறுப்பு கரும்பு அதிக விளைச்சலை கொடுக்கும்.

## விளைச்சல் பாதிப்பால் எலுமிச்சை வரத்து சரிவு

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2012,04:40 IST

நடப்பாண்டு, பருவமழை பொய்த்ததால், எலுமிச்சை விளைச்சல் பாதித்து, வரத்து கணிசமாக குறைந்தது.நெல்லை மாவட்டம் புளியங்குடி, கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை மற்றும் ஆந்திராவில் இருந்து, அதிகளவில் எலுமிச்சை ஈரோட்டுக்கு வரத்தாகிறது. ஆண்டு முழுவதும் கோவில் விசேஷங்கள், வீட்டு சுபகாரியங்கள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும், எலுமிச்சை பயன்பாடு அதிகம் உள்ளது. நடப்பாண்டு பருவமழை பொய்த்து போனதால், தமிழகத்தில் விளைச்சல் குறைந்துள்ளது. ஆடி மாதத்தில் எலுமிச்சை தேவை அதிகம் இருந்தும், விலை தாறுமாறாக உயர்ந்துள்ளதால், விற்பனைமந்தமாகவே உள்ளது.
ஈரோடு எலுமிச்சை வியாபாரி ஆறுமுகம் கூறியதாவது:ஈரோட்டுக்கு வாரத்தில், இரண்டு லோடு எலுமிச்சை வரத்தானது, தற்போது, ஒரு லோடு மட்டுமே வரத்தாகிறது. நாட்டு எலுமிச்சை சிறியதாக இருந்தாலும், சாறு அதிகம் கிடைக்கும். விவசாய எலுமிச்சை பெரிதாக இருக்கும். ஆனால், சாறு குறைந்து, தோல் தடிமனாக இருக்கும்.நடப்பாண்டு, பருவமழையின்றி, வாட்டி வதைக்கும் வெயிலால், செடியிலேயே எலுமிச்சை பிஞ்சிலேயே பழுத்து விடுகிறது. நாட்டு எலுமிச்சையும் பச்சை நிறமாக, தரம் குறைவாக வருகிறது.
நாட்டு எலுமிச்சை, 2,000 எண்ணிக்கை அடங்கிய ஒரு மூட்டை, சென்றாண்டு, 3,000 ரூபாய்க்கு விற்றது, தற்போது, 7,500 ரூபாய் வரையும், விவசாய எலுமிச்சை, 4,000 ரூபாய்க்கு விற்றது, 6,500 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. ஒரு பழம் வீதம், மூன்று முதல் நான்கு ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

## 40 ஆயிரம்ஏக்கர் மானாவாரி நிலக்கடலை பாதிப்பு கோபிசெட்டிபாளையம்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2012,04:42 IST

கருத்தை பதிவு செய்ய

தென்மேற்கு பருவ மழை பொய்த்ததால் ஈரோடு மாவட்டத்தில், 40 ஆயிரம் ஏக்கர் மானாவாரி நிலங்களில், ஆடிப்பட்டத்தில் விதைத்த நிலக்கடலை செடி வாடுகிறது.ஈரோடு மாவட்டத்தில், 30 சதவீத நிலங்கள் ஆற்றுப் பாசனத்தையும், ஏனைய நிலங்கள் நிலத்தடி நீர் மற்றும் பருவ மழையை நம்பியே உள்ளன. ஆண்டுதோறும் ஜூன், ஜூலை மாதங்களில் பெய்யும் தென்மேற்கு பருவ மழையை நம்பி, ஈரோடு மாவட்டத்தில் ஆடிப்பட்டமாக, 40 ஆயிரம் ஏக்கர் மானாவாரி நிலத்தில், நிலக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது. எண்ணெய் வித்துப் பயிர்களில் முக்கிய இடத்தை

வகிக்கும் நிலக்கடலை, கால்நடைகளுக்கு சிறந்த தீவனமாகவும், புண்ணாக்கு தயாரிக்கவும் பயன்படுகிறது.சிறுவலூர், கொளப்பலூர், கெட்டிசேவியூர், குருமந்தூர், நம்பியூர் உள்ளிட்ட பகுதிகளில் கிணற்று நீரை நம்பியே விவசாயம் நடக்கிறது. குறிப்பாக பருவ காலங்களில் பெய்யும் மழை நீரை ஆதாரமாக கொண்டே, மானாவாரி நிலங்கள் உள்ளன. நடப்பாண்டு ஜனவரி முதல் ஜூன் வரை சரியான மழை இல்லை. இரவில் பெய்யும் பனி மற்றும் சென்ற மாதத்தில் பெய்த லேசான மழையை பயன்படுத்தி, மானாவாரி நிலங்களில் கோடை உழவு செய்து, நிலக்கடலை விதைப்பு செய்தனர். ஒரு ஏக்கரில் நிலக்கடலை சாகுபடி செய்ய விதைப்பு முதல் அறுவடை காலம் வரை சராசரியாக, 15 ஆயிரம் ரூபாய் செலவாகிறது.

கோபி சுற்று வட்டாரத்தில் கோபி, சிறுவலூர், கொளப்பலூர், கெட்டிசேவியூர், குன்னத்தூர், குறிச்சி, தாளப்பதி, பூச்சநாயக்கன்பாளையம், நம்பியூர், திங்களூர், கோசனம், மந்திரிபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தென்மேற்கு பருவமழை பொய்த்ததால், மழை இல்லாமல் வெப்பம் நீடிக்கிறது. மானாவாரியில் பயிரிட்டுள்ள நிலக்கடலை செடி வாடத் துவங்கியுள்ளது. கடலையில் ஊடுபயிராக சாகுபடி செய்யப்படும் துவரை, ஆமணக்கு, பாசிப்பயறு, நரிப்பயறு, உளுந்து ஆகியவையும் கடுமையாக பாதித்துள்ளன.

சிறுவலூர் பகுதி விவசாயிகள் கூறியதாவது: மானாவாரியில் நிலக்கடலை சாகுபடி செய்ய ஏக்கருக்கு, 50 கிலோ விதை தேவை. ஒரு கிலோ விதை, 85 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. உழவு செலவு ஏக்கருக்கு, 3,500 ரூபாய். களைக்கொல்லி, மேலுரம் செலவு, 4,500 ரூபாய். அறுவடை செலவு, 3,000 என, 15 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. ஏக்கருக்கு, 1,000 முதல் 1,200 கிலோ வரை நிலக்கடலை கிடைக்கும். 138 கிலோ கொண்ட ஒரு மூட்டை 3,500 முதல் 4,000 ரூபாய் வரை விற்கப்படுகிறது. ஊடுபயிராக பயிரிட்ட விளை பொருட்கள் மூலம், 5,000 ரூபாய் வரை லாபம் கிடைக்கும். நிலக்கடலை செடியை ஓராண்டு வரை வைத்திருந்து கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்த முடியும்.

நடப்பாண்டு பருவமழை பொய்த்ததால் நிலக்கடலை சாகுபடி பரப்பளவு, 20 முதல் 30 சதவீதம் வரை குறைந்து விட்டது. மேலும், ஆடிப்பட்டத்தில் பயிரிட்ட நிலக்கடலை செடிகள் கருகத் துவங்குகின்றன. சென்ற இரண்டு நாட்களாக மானாவாரி நிலப்பகுதியில் லேசான மழை பெய்வதால் நிலக்கடலை செடிகள் மீண்டும் புத்துயிர் பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

## கொத்தவரை விலை குறைந்தது

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2012,00:35 IST

ஒட்டன்சத்திரம்:வரத்து அதிகரித்ததால் ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தையில் கொத்தவரை விலை விலை குறைந்தது. ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தை, ஆடிப்பெருக்கு விடுமுறைக்குபின்

செயல்பட்ட போது கொத்தவரை வரத்து மிகவும் குறைந்து காணப்பட்டது. இதன் காரணமாக அன்றைய தின விலை கிலோ 24 ரூபாயாக இருந்தது. தொடர்ந்து கொத்தவரை வரத்து அதிகமாக இருந்ததால் உயர்ந்திருந்த விலை கிலோவிற்கு பாதியாக குறைந்து 12 ரூபாய்க்கு விற்றது. சென்ற வாரம் குறைந்திருந்த வெண்டைக்காய் விலை கிலோவிற்கு இரண்டு ரூபாய் அதிகரித்து ஏழு ரூபாய்க்கு விற்றது. முருங்கை விலை மாற்றமின்றி கிலோ 10 ரூபாய்க்கு விற்றது.

## விவசாயிகளுக்கு மானிய விலையில் பூச்சி மருந்து

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2012,00:35 IST

ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரம் விவசாயிகளுக்கு 50 சதம் மானியத்தில் பூச்சி மருந்து வினியோகம் செய்யப்பட்டுவருகிறது. வேளாண்மை உதவி இயக்குனர் பாஸ்கரனன் கூறியதாவது:ஒட்டன்சத்திரம் வட்டாரத்தில் அதிக அளவு காய்கறிகள் மற்றும் சிறுதானியங்கள் பயிரிடப்படுகின்றன. பூச்சிகளை கட்டுப்படுத்திட அதிக விஷத் தன்மையுள்ள மருந்துகளை வாங்கி அடிப்பதை விவசாயிகள் பழக்கத்தில் கொண்டுள்ளனர். இவ்வகை மருந்துகளால் மண், பயிர்கள், இயற்கை இவைகளுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு பூச்சிகளை மட்டும் அழிக்ககூடிய இயற்கைக்கு பாதுகாப்பான மருந்து குவினல்பாஸ் பூச்சி மருந்து தற்சமயம் ஒட்டன்சத்திரம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியத்தில் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. மருந்துகளை வாங்கி பயனடையலாம், என்றார்.

## விதை கிராமத்திட்ட பயிற்சி முகாம்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2012,00:30 IST

கன்னிவாடி:கோனூர் அருகே மேலத்திப்பம்பட்டியில், விதை கிராமத்திட்ட பயிற்சி முகாம் நடந்தது. ஊராட்சி தலைவர் மயில்வாகனன் தலைமை வகித்தார். துணைத்தலைவர் மார்நாடு முன்னிலை வகித்தார். வேளாண்மை இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி பேசினார். வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் விஜயராணி, பயறு வகை சாகுபடியில் தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கினார். வாகரை மக்காச்சோள ஆராய்ச்சி நிலைய உதவிப் பேராசிரியர் ரஜினிமாலா, மக்காச்சோள சாகுபடி நுட்பங்கள் பற்றி விளக்கினார். துணை வேளாண்மை அலுவலர் மோகன், உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

**மலர் கண்காட்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2012,00:04 IST

காரைக்குடி:காரைக்குடி லீடர்ஸ் அகாடமி பள்ளியில் மலர் கண்காட்சி நடந்தது.தாளாளர் ராஜமாணிக்கம் தலைமை வகித்தார். முதல்வர் ஜெபசீலன் முன்னிலை வகித்தார். மாணவர்கள் பூ அலங்காரம், பூங்கொத்து, பூத்தொட்டி ஆகியவைகளை கண்காட்சியில் வைத்திருந்தனர்.

**தரமான விதைகள் உற்பத்தி பாளை.,யில் பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2012,02:00 IST

திருநெல்வேலி : தரமான விதைகள் உற்பத்தி செய்வது குறித்து விதை சான்றளிப்பு துறையின் மூலம் அட்மா திட்டத்தின் கீழ் மானூர், பாளை வட்டார அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகத்தில் நடந்த பயிற்சிக்கு இணை இயக்குனர் சவுந்திரராஜன் தலைமை வகித்தார். விதை ஆய்வு துணை இயக்குனர் இளங்கோ, தோட்டக் கலை துணை இயக்குனர் ராஜன் ரவிச்சந்திரன், விதை சான்று உதவி இயக்குனர் அசோக்குமார், விதை சான்று அலுவலர் சுரேஷ், நெல்லை விதை சான்று அலுவலர் வேலுசாமி, விதை சான்று அலுவலர் சிவகுருநாதன், நெல்லை விதை பரிசோதனை அலுவலர் முகம்மது காசிம், விதை பரிசோதனை அலுவலக வேளாண்மை அலுவலர் உமா மகேஸ்வரி உட்பட பலர் பேசினர்.

விதை சான்றளிப்பின் நோக்கம், விதைகளை சுத்தி ெச்யும் முறைகள், விதை பரிசோதனையின் முக்கியத்துவம், விதை பரிசோதனை செய்யும் முறைகள், தரமான விதை உற்பத்தி உட்பட பல்வேறு தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு பயிற்சி கையேடுகள் வழங்கப்பட்டன.

---

வறட்சி காலத்தில் கரும்பு சாகுபடி செய்வது எப்படி

பதிவு செய்த நேரம்:2012-08-08 10:10:30

குளித்தலை, : வறட்சி காலத்தில் கரும்பு சாகுபடி மேற்கொள்வது குறித்து விவசாயிகளுக்கு ஈ.ஐ.டி. பாரி நிறுவன அதிகாரிகள் செயல்முறை விளக்கம் ஆகஸ்ட் 4ம் தேதி செய்து காண்பிக்கப்பட்டது. இரும்பூதிப்பட்டியில் உள்ள முருகன் என்ற விவசாயி வயலில் தோகை பொடியாக்கல், தோகை பரப்புதல், தென்னை நார் கழிவு பரப்புதல், ஏக்கருக்கு 1 மூட்டை பொட்டாஷ் கரைசல் தெளித்தல் மற்றும் சொட்டு நீர் பாசனம் அமைப்பது குறித்து செயல்முறை விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். பயிற்சி முகாமில் உதவி மேலாளர் (விவசாய பயிற்சி) செல்வன், நீர் மேலாண்மை பற்றி விளக்கம் அளித்தார். கோட்ட அலுவலர் ராஜேந்திர பாண்டியன், களப் பணியாளர் மலைக்கொழுந்தன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

---

**கையிருப்பு அதிகமாக உள்ள நிலையிலும் தனியார் கோதுமை ஏற்றுமதிக்கு தடை விதிக்க மத்திய அரசு திட்டம்**



*ரிதுராஜ் திவாரி – மாத்வி சால்லி*

*புதுடெல்லி/அகமதபாத்*

*இரண்டு ஆண்டுகள் தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு கையிருப்பு உள்ள நிலையிலும், தனியார் நிறுவனங்களின் கோதுமை ஏற்றுமதிக்கு தடை விதிப்பது குறித்து மத்திய அரசு பரிசீலனை செய்து வருகிறது. நடப்பு கரீஃப் பருவத்தில் தென்மேற்கு பருவமழை இயல்பான அளவைக் காட்டிலும் 20 சதவீதம் குறைவாக பெய்துள்ளதால் வறட்சி ஏற்படலாம் என்ற அச்சப்பாடு நிலவி வருவதே இதற்கு காரணமாகும்.*

*உணவு அமைச்சகம்*

*உணவு அமைச்சகத்தின் உயர் அதிகாரி ஒருவர் இதுகுறித்து கூறுகையில், "சர்வதேச அளவில் கோதுமை விலை மிகவும் உயர்ந்துள்ளது. இந்த வாய்ப்பை பயன்படுத்திடும் வகையில் தனியார் நிறுவனங்கள் அதிக அளவில் ஏற்றுமதி செய்யும். இதனால் உள்நாட்டில் பற்றாக்குறை ஏற்பட்டு விலை உயர வாய்ப்புள்ளது. எனவே பகிரங்க பொது உரிம திட்டத்தின் கீழ் ஏற்றுமதி செய்யப்படும் கோதுமைக்கு தடை விதிக்க திட்டமிடப்பட்டுள்ளது" என்று தெரிவித்துள்ளார்.*

*பணவீக்கம்*

*பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் கோதுமை ஏற்றுமதிக்கு நான்கு ஆண்டுகளுக்கு தடை விதிக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில் உள்நாட்டில் கோதுமை உற்பத்தி சிறப்பான அளவில் அதிகரித்ததையடுத்து கடந்த 2011 செப்டம்பர் மாதத்தில் கோதுமை ஏற்றுமதி மீதான தடை நீக்கப்பட்டது. அன்றிலிருந்து இதுவரை பகிரங்க பொது உரிமத்திட்டத்தின் கீழ் 18 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.*

*கோதுமை ஏற்றுமதியில் உலகின் இரண்டாவது மிகப்பெரிய நாடாக உள்ள ஆஸ்திரேலியாவிலும் வறட்சி காரணமாக கோதுமை உற்பத்தி குறையும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் சர்வதேச சந்தைகளில் 220 டாலராக இருந்த ஒரு டன் கோதுமை விலை தற்போது 290–310 டாலராக உயர்ந்துள்ளது.*

*நம்நாட்டில் முன்பேர வர்த்தக சந்தைகளிலும் கடந்த ஒரு மாதத்தில் கோதுமை விலை 20 சதவீதம் உயர்ந்துள்ளது. இதற்கு தீர்வு காணும் வகையில் தனியார் நிறுவனங்களின் கோதுமை ஏற்றுமதிக்கு தடை விதிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. தென்மேற்கு பருவமழை குறைந்துள்ளதால் பருப்பு வகைகள், நெல் எண்ணெய் வித்துக்கள் போன்றவற்றின் பயிரிடும் பரப்பளவு குறைந்துள்ளது.*

*தானியங்கள்*

*இந்நிலையில் உணவு தானியங்கள் விலை உயர்ந்துள்ளதால் கடந்த ஜூன் மாதத்தில் மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பொது பணவீக்கம் 7.25 சதவீதமாக உள்ளது. இது பாரத ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டு அளவைக் காட்டிலும் அதிகமாகும். மேலும் இதே மாதத்தில் சில்லரை விலை பணவீக்கமும் 10.02 சதவீதமாக உள்ளது. எனவே தனியார் நிறுவனங்களின் கோதுமை ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்படலாம் என்ற அச்சப்பாடு*

*நிலவி வருகிறது.*

*அதேசமயம் ஏற்றுமதிக்கு தடை விதிக்க வாய்ப்பில்லை என தனியார் நிறுவனங்கள் கருதுகின்றன. எம்சன்ஸ் இன்டர்நேஷனல் என்ற தனியார் நிறுவனம் 6 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி செய்துள்ளது. இந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் அனில் மோங்கா கூறுகையில், "நம்நாட்டில் கோதுமை கையிருப்பு அதிகமாக உள்ளது. எனவே தனியார் நிறுவனங்களின் கோதுமை ஏற்றுமதிக்கு தடை விதிக்க வாய்ப்பில்லை. வெளிநாட்டு நிறுவனங்களின் ஒப்பந்த புள்ளியில் குறிப்பிடப்படும் சராசரி விலையை அனைத்து நிறுவனங்களின் ஏற்றுமதிக்கும் பொது விலையாக நிர்ணயிக்கும்படி மத்திய அரசை கேட்டுக் கொண்டுள்ளோம்" என்று தெரிவித்துள்ளார்.*

*ஒப்பந்த புள்ளி*

*கார்கில், ஸ்டார்காம் போன்ற சர்வதேச நிறுவனங்கள் ஒரு டன் கோதுமையை 260–302 டாலருக்கு வாங்க ஒப்பந்த புள்ளி அனுப்பி உள்ளன. இது பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை நிர்ணயித்த விலையை (228 டாலர்) காட்டிலும் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. மத்திய சேமிப்பு கிடங்குகளில் 5.73 கோடி டன் கோதுமை கையிருப்பு உள்ளது. இதிலிருந்து 20 லட்சம் டன் கோதுமையை நடப்பு நிதி ஆண்டிற்கு ஏற்றுமதி செய்ய கடந்த மாதம் பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை அனுமதி அளித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.*

## பர்லியாரில் துரியன் பழ சீசன் தொடங்கியது



பர்லியார் பழப்பண்ணையில் விற்பனைக்கு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள துரியன் பழங்களை படத்தில் காணலாம்.

*குன்னூர், ஆக.8–*

*பர்லியார் பழப்பண்ணை யில் துரியன் பழ சீசன் தொடங்கியது.*

*நம்பிக்கை*

*குழந்தை பாக்கியம் இல்லா தவர்கள் துரியன் பழத்தை உட்கொண்டால் குழந்தை பாக்கியம் உண்டாகும் என்ற நம்பிக்கை இருந்து வருகிறது. துரியன் பழத்தின் தாய் நாடு மலேசியா ஆகும். இந்த துரியன் பழ மரங்கள் கடல் மட்டத்தில் இருந்து ஆயிரம் அடி முதல் 2 ஆயிரத்து 500 அடி வரை உள்ள பகுதிகளில் வளரக் கூடியது ஆகும்.*

*நாற்று நடவு செய்த பின்பு 10 ஆண்டுகள் கழித்து, பலன் தரும். 30 அடி உயரம் வளரும் போதே இந்த மரம் பலன் தர தொடங்கும். துரியன் பழ சீசன் ஜூலை, ஆகஸ்ட் மற்றும் டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி ஆகிய மாதங்கள் ஆகும். இதில் ஜூன், ஆகஸ்ட் மாதங்கள் முதல் சீசனாகவும், டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி ஆகிய மாதங்கள் 2–வது சீசனாகவும் உள்ளன.*

*33 துரியன் மரங்கள்*

*குன்னூர்– மேட்டுப்பாளை யம் ரோட்டில் உள்ள பர்லியார் அரசு தோட்டக்கலைத்துறை பண்ணையில் 33 துரியன் மரங்கள் உள்ளன. இந்த மரங் களில் தற்போது 6 மரங்களில் மட்டுமே பலன் கொடுத்துள் ளது. இந்த ஆண்டு தென் மேற்கு பருவ மழை பொய்த்த காரணத்தால், துரியன் பழ மகசூல் குறை வடைந்துள்ளது. மேலும் சீசனும் தாமதமாக தற்போது தான் தொடங்கி உள்ளது. மீதி உள்ள மரங்களில் 2–வது சீசன் காலமான டிசம்பர், ஜனவரி மாதங்களில் மகசூல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*மகசூல் கிடைத்துள்ள மரங்கள் டெண்டர் விடப் பட்டன. மங்குஸ்தான் மற்றும் துரியன் பழ மரங்களை மேட்டுப்பாளையத்தை சேர்ந்த செய்யது சுலைமான் என்பவர் ஏலம் எடுத்துள்ளார். இது குறித்து அவர் கூறும் போது, கடந்த ஆண்டு துரியன் பழ மரங்களில் நல்ல மகசூல் கிடைத்தது. இந்த ஆண்டு மழை இல்லாததால் மகசூல் குறைவடைந்துள்ளது. துரியன் பழங்கள் இன்னும் 25 நாட்களுக்கு மட்டுமே கிடைக்கும் என்று கூறினார்.*

மசினகுடி பகுதியில்

# வெள்ளை பூண்டு பயிரிடுவதில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்

மசினகுடி, ஆக.8–

மசினகுடி பகுதியில் பூண்டு சாகுபடி செய்வதில் ஏராளமான விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

## காய்கறிகள் சாகுபடி

மசினகுடி பகுதியில் உள்ள வாழைத்தோட்டம், மாவ னல்லா, மாயார், பொக்காபுரம் உள்பட பல்வேறு கிராமங் களில் உருளைக்கிழங்கு, பீன்ஸ், பஜ்ஜி மிளகாய், கத்தரிக் காய், இஞ்சி, வாழை, மஞ் சள் உள்பட பல்வேறு காய்கறிகள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

தற்போது பீன்ஸ் மற்றும் வெள்ளை பூண்டு சாகுபடி செய்யும் சீசன் என்பதால் வாழைத்தோட்டம், மாயார் பகுதிகளில் உள்ள ஏராளமான விவசாயிகள் தங்களது நிலங் களில் வெள்ளை பூண்டை பயிர் செய்துள்ளனர்.

## விளைச்சல் குறைவு

3 மாதங்களில் அறுவடை செய்யக்கூடிய இந்த வெள்ளை பூண்டு, மேட்டுப்பாளையம், ஊட்டி ஆகிய பகுதிகளில் உள்ள விற்பனை நிலையங் களுக்கு எடுத்து செல்லப்பட்டு, விற்பனை செய்யப்படுகிறது. தற்போது ஒரு கிலோ வெள்ளை பூண்டு சுமார் ரூ. 50 முதல் ரூ.80 ரூபாய் வரை விற்பனையாகிறது.

தென் பருவமழை பொய்த் ததன் காரணமாக பூண்டு விளைச்சல் சற்று குறைவாகவே உள்ளது. ஒரு கிலோ விதை ரூ.100 வரை வாங்கி, பயிர் செய்யப்பட்டு உள்ளதால் 3 மாதத்திற்கு பிறகு ஒரு கிலோ பூண்டு ரூ.100–க்கு மேல் விற்பனை செய்தால் மட்டுமே விவசாயிகளுக்கு லாபகரமாக இருக்கும்.

## தண்ணீர் பற்றாக்குறை

இது குறித்து வாழைத் தோட்டம் பகுதி விவசாயிகள் சிலர் கூறியதாவது:–

பூண்டு விளைச்சலுக்கு வளமிக்க மண் இந்த பகுதியில் உள்ளது. அத்துடன் தற்போது பூண்டு சாகுபடி செய்யும் சீசன் என்பதால் பூண்டை பயிர் செய்துள்ளோம். 3 மாதங்களுக்கு பிறகு தான் பயிரிடப்பட்டு உள்ள பூண்டை அறுவடை செய்ய முடியும். பருவமழை சரியாக இல்லாததால் தண்ணீர் பற்றாக்குறை யும் ஏற்பட்டு உள்ளது.

3 மாதத்திற்கு பிறகு அறு வடை செய்யும் காலத்தில் ஒரு கிலோ ரூ.100 முதல் ரூ.150 வரை விற்பனை ஆனால் மட் டுமே லாபம் அடைய முடியும். நல்ல விலை கிடைக்கும் என்று எதிர் பார்க்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூறினார்.



மசினகுடி அருகே வாழைத்தோட்டத்தில் விவசாயிகள் பூண்டு பயிரிட்டுள்ளனர். இதற்கு தண்ணீர் தெளிக்கும் பணியில் ஒரு விவசாயி ஈடுபட்டுள்ள காட்சி.